ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த

# திருவாசிரியம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருவாசிரியம்

## தனியன்

**காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து ⋆**
**ஆசிரியப் பாவதனால் அரு மறை நூல் விரித்தானை ⋆**
**தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை ⋆**
**மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே**

‡ செக்கர் மா முகில் உடுத்து மிக்க செஞ்சுடர்ப் பரிதி சூடி ⋆
அஞ்சுடர் மதியம் பூண்டு ⋆
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய் ⋆
திகழ் பசுஞ்சோதி மரதகக் குன்றம் ⋆
கடலோன் கைம் மிசைக் கண்வளர்வது போல் ⋆
பீதக ஆடை முடி பூண் முதலா ⋆
மேதகு பல் கலன் அணிந்து ⋆
சோதி வாயவும் கண்ணவும் சிவப்ப ⋆
மீதிட்டுப் பச்சை மேனி மிகப் பகைப்ப ⋆
நச்சு வினைக் கவர்தலை அரவின் அமளி ஏறி ⋆
எறி கடல் நடுவுள் அறி துயில் அமர்ந்து ⋆
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் ⋆
தெய்வக் குழாங்கள் கை தொழக் கிடந்த ⋆
தாமரை உந்தித் தனிப் பெரு நாயக ⋆
மூ உலகளந்த சேவடி யோயே ! ॥ **1** ॥

உலகு படைத்துண்ட எந்தை ⋆
அறை கழல் சுடர்ப் பூந் தாமரை சூடுதற்கு ⋆
அவாவார் உயிர் உருகி உக்க ⋆
நேரிய காதல் அன்பில் இன்பீன் தேறல் ⋆
அமுத வெள்ளத்தானாம் சிறப்பு விட்டு ⋆
ஒரு பொருட்கசைவோர் அசைக ⋆
திருவொடு மருவிய இயற்கை ⋆
மாயாப் பெருவிறல் உலகம் மூன்றினொடு நல் வீடு பெறினும் ⋆
கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே ‖ **2** ‖

குறிப்பில் கொண்டு நெறிப் பட ⋆
உலகம் மூன்றுடன் வணங்கு தோன்று புகழ் ஆணை ⋆
மெய் பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வன் ஆகி ⋆
சுடர் விளங்க கலத்து ⋆
வரை புரை திரை பொரு பெரு வரை வெருவர ⋆
உரு முரல் ஒலி மலி நளிர் கடல் பட அரவரசு ⋆
உடல் தட வரை சுழற்றிய ⋆
தனிமாத் தெய்வத்தடியவர்க்கினி நாம் ஆள்
ஆகவே இசையுங்கொல் ⋆ ஊழிதோறூழி ஓவாதே ‖ **3** ‖

ஊழிதோறூழி ஓவாது ⋆
வாழிய என்று யாம் தொழ இசையுங்கொல் ⋆
யாவகை உலகமும் யாவரும் இல்லா ⋆
மேல் வரும் பெரும் பாழ்க் காலத்து ⋆
இரும் பொருட்கெல்லாம் அரும் பெறல் தனி வித்து ⋆
ஒரு தான் ஆகித் தெய்வ நான்முகக் கொழு முளை ஈன்று ⋆
முக்கண் ஈசனொடு தேவு பல நுதலி ⋆

மூவுலகம் விளைத்த உந்தி ⋆
மாயக் கடவுள் மா முதல் அடியே ‖ **4** ‖

மா முதல் அடிப் போதொன்று கவிழ்த்தலர்த்தி ⋆
மண் முழுதும் அகப்படுத்து ⋆
ஒண் சுடர் அடிப் போதொன்று விண் செலீ இ ⋆
நான்முகப் புத்தேள் நாடு வியந்துவப்ப ⋆
வானவர் முறை முறை வழி பட நெறீ இ ⋆
தாமரைக் காடு மலர்க் கண்ணொடு கனி வாய் உடையதுமாய் ⋆
இரு நாயிறாயிரம் மலர்ந்தன்ன ⋆
கற்பகக் காவு பற்பல வன்ன ⋆
முடி தோள் ஆயிரம் தழைத்த ⋆
நெடியோய்க்கல்லதும் அடியதோ உலகே ‖ **5** ‖

ஓ ஓ ! உலகினதியல்வே ⋆
ஈன்றோள் இருக்க மணை நீராட்டி ⋆
படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து ⋆
தேர்ந்துலகளிக்கும் முதற் பெரும் கடவுள் நிற்ப ⋆
புடைப் பல தான் அறி தெய்வம் பேணுதல் ⋆
தனாது புல் அறி வாண்மை பொருந்தக் காட்டி ⋆
கொல்வன முதலா அல்லன முயலும் ⋆
இனைய செய்கை இன்பு துன்பளி ⋆
தொல் மா மாயப் பிறவியுள் நீங்காப் ⋆
பல் மா மாயத்தழுந்துமா நளிர்ந்தே ‖ **6** ‖

‡ நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும் ⋆
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா ⋆
யாவகை உலகமும் யாவரும் அகப்பட ⋆

நிலம் நீர் தீ கால் சுடர் இரு விசும்பும் ⋆
மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க ⋆
ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து ⋆
ஓர் ஆல் இலைச் சேர்ந்த எம் பெரு மா மாயனை அல்லது ⋆
ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே ‖ 7 ‖

அடிவரவு — செக்கர் உலகு குறிப்பு ஊழி மாமுதல் ஓஓ உலகு நளிர் முயற்றி

திருவாசிரியம் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்